# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*************

முறையீட்டு மனு எண்.0086/2015

ஆணை எண்.0001/2015

நாள்: 04/09/2015

காலம் சென்ற திரு. சம்பந்தம் அவர்களின்
மனைவி திருமதி தனலட்சுமி
மகள் திருமதி சந்திரா
மகள் திருமதி வசந்தா
எண்.9-A, இராஜா தோட்டம்,
பெரவள்ளூர்,
சென்னை-600 032.

- முறையீட்டு மனுதாரர்கள்

உதவி பொறியாளர்,
66-வது வார்டு.
மண்டலம்-6,
சென்னை மாநகராட்சி,
சென்னை.

- எதிர் மனுதாரர்

சென்னை, பெரவள்ளூர், இராஜா தோட்டம், எண்.9-Aல் வசித்து வரும் காலம் சென்ற சம்பந்தம் அவர்களின் மனைவி திருமதி தனலட்சுமி, மகள்கள் திருமதி சந்திரா மற்றும் திருமதி வசந்தா ஆகிய மூவரும் தங்களுக்குப் பாத்தியப்பட்ட வீட்டு மனை நிலம் சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அவ்வீட்டு மனையில் கட்டிடம் கட்டப்பட்டு வருவதாகவும், அதற்கு சென்னை மாநகராட்சியின், 66வது வார்டு உதவி பொறியாளர் உடந்தையாக இருப்பதாகவும் தெரிவித்து நடவடிக்கை எடுக்கும்படி 03.06.2015 நாளிட்ட கடிதத்தில் இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்துள்ளார்கள். மேற்படி முறையீட்டு மனு, மனு எண்.0086/2015 ஆக பதிவு செய்யப்பட்டு கீழ்காணும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

# ஆணை

மேற்படி மனுதாரர்கள், பெரவள்ளூர் கிராமம், பிளாக் எண்.33, புல எண்கள் 245 மற்றும் 252க்கு உட்பட்ட 1.66 செண்ட் நிலம் தங்களது குடும்ப மூதாதையர்களின் சொத்து எனவும், வாரிசுதாரர்கள் வகையில் தங்களுக்குப் பாத்தியப்பட்டது என்று தெரிவித்துள்ளனர். மேற்குறிப்பிட்ட வீட்டு மனைகளில் ஒரு சில சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டிடங்கள் கட்டி வருவதாகவும், அதற்கு சென்னை மாநகராட்சி, 66வது வார்டு உதவிப் பொறியாளர் உடந்தையாக இருப்பதுடன், எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் ஆக்கிரமிப்பாளர்களிடம் கையூட்டு பெற்றுள்ளார் என்றும் தெரிவித்துள்ளனர். மேலும் பெரவள்ளூர் பகுதியில் அத்து மீறி கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். எனவே, சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளர் மீது நடவடிக்கை எடுப்பதுடன், நிலத்தையும் மீட்டு தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வழக்கில் மனுதாரர்களை விசாரிப்பதற்காக 31.08.2015 விசாரணை நாளாக அறிவிக்கப்பட்டது. விசாரணையில் கீழ்க்கண்டவர்கள் கலந்து கொண்டனர்.

1) காலம் சென்ற திரு. சம்பந்தம் அவர்களின் மகள் திருமதி. சந்திரா
2) காலம் சென்ற திரு. சம்பந்தம் அவர்களின் மகள் திருமதி. வசந்தா

விசாரணையின் போது மனுதாரர்களின் நிலத்தினை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பதற்கு சென்னை நகர நீதிமன்றத்தில் சிவில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாக, 31.08.2015 அன்று விசாரணைக்கு வருகை தந்த திருமதி சந்திரா மற்றும் திருமதி வசந்தா ஆகியோர் தெரிவித்தனர். விசாரணையின் பொழுது இதற்கான ஒப்புதல் அளிப்பும் அளித்துள்ளனர். தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 10-ல் உட்பிரிவு (3)(b)-ன் படி நீதிமன்றம் முன்பு நிலுவையில் உள்ள பொருள் பற்றி எதனையும் முறைமன்ற நடுவர் விசாரணை செய்தல் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நேர்வு, சம்பந்தப்பட்ட பொருள் நீதிமன்ற விசாரணைக்குட்பட்டுள்ளதால், மனுதாரர்களின் முறையீடு இம்முறைமன்ற நடுவத்தின் பரிசீலனைக்கு உட்படாது எனத் தெரிவித்து இதன்படி முடிவு செய்து ஆணையிடுகிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்கள்

திருமதி. ச. தனலட்சுமி,
திருமதி. ச. சந்திரா,
திருமதி. ச. வசந்தா,
நெ.9–A, ராஜா தோட்டம்,
பெரவள்ளூர், சென்னை–600 082.